அரசாங்க தொழில்முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சு

# செயற்திறன் அறிக்கை
# 2018

**கௌரவ லக்ஷ்மன் கிரியல்ல**

அரசாங்க தொழில்முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர்

**திரு. ரவீந்திர ஹேவாவிதாரண**

அரசாங்க தொழில்முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர்

# அமைச்சரின் செய்தி



2018 ஆம் ஆண்டில் முதல் இரு காலாண்டுகளுக்குள் உரியவாறு எனது அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள தாபனங்களினால் அடையப்பட்ட முன்னேற்றத்தை குறிப்பிட்டு காட்டுகின்ற 2018 ஆம் ஆண்டுக்கான செயற்திறன் அறிக்கை செய்தியொன்றினை வெளியிடுவதற்கு கிடைத்ததையொட்டி மகிழ்ச்சியடைகின்றேன்.

அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு 2015.09.21 ஆந் திகதி பிரகடனப்படுத்தப்பட்ட 1933/13 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2015.11.24 பிரகடனப்படுத்தப்பட்ட 1942/10 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் புதியதொரு அமைச்சாக உருவாக்கப்பட்டது. இந்த அமைச்சுக்கு கண்டி நகர அபிவிருத்தி விடயம் 2018.05.12 ஆந் திகதிய 2070/56 ஆம் இலக்கம் அதி விசேட வர்த்தமானியின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

நட்டம் எதிர்நோக்குகின்ற அரச தொழில்முயற்சிகள் மறுகட்டமைப்பு தொழிற்பாட்டினூடாக முன்னேற்றமடையச் செய்வதே இந்த அமைச்சின் பிரதான கடமைப் பொறுப்பாக அமைந்துள்ளது. இந்த நோக்கத்தை முன்னணியாகக் கொண்டு இப்போதாகும்போதும் அமைச்சினால் பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இங்கு விசேடமாக நட்டத்தை எதிர்நோக்குகின்ற பெருந்தோட்டத்துறைத் தொடர்பாக எமது விசேட கவனத்தைச் செலுத்தினோம். அங்கு அத்தொழில்முயற்சிகள் இலாபம் உழைக்கும் நிலைமைக்கு கொண்டு வருவதற்காக புதிய கருத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு ஏற்றவாறு உள்ள இயலுமை கண்டறிந்து அக்காரணம் தொடர்பில் செயலாற்றுவதற்கு பெருந்தோட்டக்கம்பனிகள் பணிக்கப்பட்டன.

மேலும் சிறப்பறிஞர் குழுவின் உதவியுடன் உரிய தாபனங்களின் முன்னேற்ற மீளாய்வு நடவடிக்கைகளை முறைசார்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. அதேபோன்று நிலுவையாக இருந்த சேமலாபநிதி மற்றும் உழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியங்களுக்குரிய கணிசமான தொகையினை கொடுப்பனவு செய்வதற்கு இயலுமை பெற்றிருப்பது நாம் பெற்றுள்ள சாதனையாகும்.

ஶ்ரீலங்கள் விமானசேவைக் கம்பனி இலங்கை அடையாளத்தை உலகம் முழுவதும் காட்சிப்படுத்துகின்ற சின்னமாக மேலும் பாதுகாத்துக்கொள்ளுவது எமது எதிர்பார்ப்பாகும். அங்கு ஶ்ரீலங்கன் விமானசேவை நட்டத்தை எதிர்நோக்கும் நிலைமையிலிருந்து விடுவித்துக்கொள்வதற்காக மூலோபாய உதவியாளரின் உதவியினைப் பெற்றுக்கொள்வதற்கும், மறுகட்டமைப்பு தொழிற்பாட்டினூடாக நட்டத்தை குறைத்து இந்த சேவை முறைசார் விதத்தில் கொண்டு செல்வதற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

இலங்கையின் அரச நிதி துறையில் பாரிய பகுதியான அரச வங்கிகளில் உடைமை இந்த அமைச்சின் நோக்கெல்லையின் கீழிருந்தது. அங்கு பாசல் III சமவாயம் பிரகாரம் உரிய வங்கிகளின் நிதி முதலீட்டு தேவைப்பாடு பாதுகாத்துக்கொள்வதில் எம்மால் தேவையான வழிகாட்டல் மற்றும் பங்களிப்பு வழங்கியுள்ளோம். அங்கு சமான நோக்கங்களை அடைவதனை அடிப்படையாகக் கொண்டு வங்கிகளை ஒருங்கிணைப்பதற்கும், மூலதன தேவைப்பாடு பாதகாத்துக்கொள்வதற்கும், புதுப்படுத்துவதனூடாக வங்கி துறை எதிர்கொள்ளவேண்டியுள்ள போட்டித்தன்மையை வெற்றிகொள்வதற்கும் அரச வங்கிகளை ஈடுபடுத்திக் கொள்வதற்கு நடவடிக்கையெடுத்துள்ளேம்.

இந்த அமைச்சின் நோக்கெல்லைக்கு புதிதாக சேர்கின்ற கண்டி நகர அபிவிருத்தி விடயம் எமது விசேட கவனத்திற்குட்பட்டுள்ளது. அங்கு வேறு அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் கருத்திட்ட அலுவலகங்கள் மூலம் கண்டி நகரத்திற்குள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற 30 இற்கு மேற்பட்ட பாரிய அபிவிருத்தி கருத்திட்டங்களின் முன்னேற்ற மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தும் நடவடிக்கை இந்த அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. ஐக்கிய நாட்டவரின் அமைப்பு மூலம் உலக பாரம்பரிய நகரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மலைவாழ் கண்டி நகரத்தின் ஆளுமை, கலாச்சாரம் மற்றும் சமூக சற்றுச்சூழல் பாதுகாக்கப்படும் வகையில் அற்புதமான நகரமாக அபிவிருத்தி செய்வது எமது நோக்கமாகும்.

அதற்கமைய எனது தலைமைத்துவத்தின் கீழ் எதிராகலத்தில் மேலும் கண்டி நகரத்தை மையமாகக் கொண்ட அபிவிருத்தி கருத்திட்டங்கள் பல நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட அனைத்து நடவடிக்கைகள் விளைவுபெருக்கமான முறையிலும் மற்றும் திருப்திகரமான விதத்திலும் நிறைவு செய்துகொள்வதற்கு அமைச்சின் செயலாளர் உட்பட பதிவயணியினர் மூலம் எனக்கு கிடைக்கும் சிறப்பான பங்களிப்பு குறித்து நான் பாராட்டுகின்றேன்.

**லக்ஷ்மன் கிரியெல்ல**
அரசாங்க தொழில்முயற்சிகள், மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர்

# செயலாளரின் செய்தி



அரசாங்க தொழில் முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சுக்கு இலங்கையிலுள்ள அரசாங்க உரித்தான தொழில் முயற்சிகள் மத்தியில் இனங்காணப்பட்டுள்ள இலாபமற்ற தொழில் முயற்சிகளை மறுசீரமைத்தல் மற்றும் கண்டி நகர அபிவிருத்தியினை ஒருங்கிணைத்தல் ஆகிய பொறுப்புக்கள் குறித்துரைக்கப்பட்டுள்ளன 2070/56 ஆம் இலக்க 2018.05.18 ஆம் திகதிய வர்த்தமானிக்கு அமைவாக இலங்கை பெலவத்த சுகர் கம்பனி, செவனகல சுகர் கம்பனி, கந்தளாய் சுகர் கம்பனி மற்றும் கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் ஆகிய சீனி கம்பனிகளும் இவ்வமைச்சுக்கு சேர்க்கப்பட்டுள்ளன.

ஆண்டின் போது நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத்திற்கும் பாரிய சுமையொன்றாக தோற்றம் பெற்றுள்ள அரசாங்க தொழில் முயற்சியினை கண்காணிக்கும் செயன்முறையினை நோக்கி நாம் கவனம் செலுத்திவருகின்றோம். கொள்கை தொடர்பான தொழிற்பாடுகளை பொறுப்பேற்பதுடன், நட்டங்களை குறைப்பதற்கும் செயலாற்றுகையினை அதிகரிப்பதற்கும் இவ்வமைச்சுக்கு பெருந்தோட்டங்கள் அமைச்சு தொடர்ந்தும் மீள்கட்டமைத்தது. அதற்கமைய, இப்பெருந்தோட்டங்கள் அவற்றின் செயலாற்றுகையினை அதிகரிப்பதற்கு நட்டங்களை குறைக்கக்கூடியதாகவும் இருந்தன. அத்துடன் அமைச்சானது இவ்வமைச்சின் மேற்பார்வையின் கீழ் வருகின்ற 03 பெருந்தோட்டங்கள், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி மற்றும் ஏனைய நியதிச்சட்ட கொடுப்பனவு நிலுவைகளை தீர்ப்பனவு செய்தலினை ஒருங்கிணைத்தது. எனவே பெருந்தோட்டங்கள் 2018 இல் பங்களிப்புக்களை கிரமமாக கொடுப்பனவு செய்கின்றன.

புதிய பணிப்பாளர் சபை ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் இற்கு நியமிக்கப்பட்டதுடன், புதிய நடவடிக்கைத் திட்டத்திற்கு அமைவாக மீள்கட்டமைப்பு முயற்சிகள் தொடர்கின்றன.

அரசின் கீழுள்ள அரச வங்கிகள் அவற்றின் செயலாற்றுகை கணிசமான மேம்பாட்டினை கொண்டிருந்தன. மூலதன தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன், ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் சேவையினூடாக பிரதேச அபிவிருத்தி வங்கிக்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. "என்டர் பிரைஸ் ஸ்ரீ லங்கா" என்ற நிகழ்ச்சித் திட்டம், நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் வழங்கப்பட்ட வட்டி உதவு தொகையுடனும் அரசாங்கத்தின் "தொலைநோக்கு 2025" இற்கு அமைவாகவும் புதிய தொழில் முயற்சியாளர்களுக்கான தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் பொருட்டு வங்கிகளின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இலங்கை அரசியல் யாப்பிற்கான 19 ஆவது திருத்தத்திற்கமைவாக அரசாங்கத்தின் மூலம் 51% பங்குரிமைகளை உரித்துக்கொள்கின்ற நிறுவனங்கள் அரசாங்கம் பெறுகை வழிகாட்டல்களை கடைபிடிக்க வேண்டுமென்பதுடன், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் ஊடாக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட வேண்டும். எனவே அமைச்சானது வெளிப்படைத் தன்மையினை உறுதி செய்யும் பொருட்டும் பெறுகை செயன்முறையில் சிக்கனத்தையும் வெளிப்படைத்தன்மையினையும் உருவாக்குவதன் பொருட்டு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஏற்பாடுகளை நிறுவனங்கள் கடைபிடிக்கச் செய்வதற்கு முயற்சிகளை எடுத்தது.

குறித்தொதுக்கப்பட்ட பொறுப்புக்களின் பரந்த விடயப்பரப்புக்களை பொறுப்பேற்பதற்கு அமைச்சு போதிய மனித வளங்களை கொண்டிருக்கவில்லை . எவ்வாறாயினும் அமைச்சுக்கு மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான பதவியணி மாத்திரம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ் மனித வள இடைவெளியினை நிரப்பும் பொருட்டு அமைச்சு மீள்கட்டமைப்பு முயற்சிகளுக்கு உதவுவதற்காக நிபுணர் குழாமொன்றினை நிர்வகிப்பதற்கு 2018 ஆகஸ்ட் இறுதியில் அமைச்சரவையிடமிருந்து அனுமதியினை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது.

இப்பின்னணியுடன் நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து அமைச்சினால் செயலாற்றப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றத்தினை உள்ளடக்குகின்ற செயற்திறன் அறிக்கயினை 2018 இற்கான இச்செய்தியினை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ் அனைத்து நடவடிக்கைகளையும் செயலாற்றுவதில் கௌரவ அமைச்சர் மற்றும் கௌரவ பிரதி அமைச்சர் ஆகியோரின் வழிகாட்டல்களும் பெற்றுக் கொள்ளப்பட்டது இவ் உதவிக்கு எனது பாராட்டினை தெரிவிக்கின்றேன்.

எமது வழிகாட்டல்களை பின்பற்றுவதன் மூலம் எமக்கு ஆதரவளித்த அனைத்து நிறுவனங்களினதும் பிரதானிகளுக்கும் நான் நன்றி கூறுகின்றேன்.

மேலும் இவ்வனைத்து தொழிற்பாட்டிலும் எமக்கு உதவுகின்ற அமைச்சின் அலுவலர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ரவீந்திர ஹேவாவிதாரண**
அரசாங்க தொழில்முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர்

# 2018ம் ஆண்டில் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் தொடர்பான தகவல்கள்

## வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள்

- **இலங்கை வங்கி**

| | | |
|---|---|---|
| தலைவர் | - | திரு. ரொனால்ட் பெரேரா |
| தொ.பே.இல. | - | 011-2348877 |
| தொலை நகல் | - | 011-2452033 |
| மின்னஞ்சல் | - | chairman@boc.lk |

- **மக்கள் வங்கி**

| | | |
|---|---|---|
| தலைவர் | - | திரு. ஹேமசிறி பிரனாந்து |
| தொ.பே.இல. | - | 011-2329822 |
| தொலை நகல் | - | 011-2447473 |
| மின்னஞ்சல் | - | chairman@peoplesbank.lk |

- **தேசிய சேமிப்பு வங்கி**

| | | |
|---|---|---|
| தலைவர் | - | திரு. அஷ்வின் த சில்வா |
| தொ.பே.இல. | - | 011-2573334 |
| தொலை நகல் | - | 011-2574002 |
| மின்னஞ்சல் | - | chairman@nsb.lk |

- **அரச ஈட்டு, முதலீட்டு வங்கி**

| | | |
|---|---|---|
| தலைவர் | - | திரு. நிரோஷன பெரேரா |
| தொ.பே.இல. | - | 011-2573563 |
| தொலை நகல் | - | 011-2573346 |
| மின்னஞ்சல் | - | chairman@smib.lk |

- **பிராந்திய அபிவிருத்தி வங்கி**

| | | |
|---|---|---|
| தலைவர் | - | திரு. கஸ்தூரி அநுராதநாயக்க |
| தொ.பே.இல. | - | 011-2035460 |
| தொலை நகல் | - | 011-2906877 |
| மின்னஞ்சல் | - | chairman@rdb.lk |

- **லங்கா புத்ர அபிவிருத்தி வங்கி**

| | | |
|---|---|---|
| தலைவர் | - | திரு. ஜே. டீ. எஸ். பீ. காரியவசம் |
| தொ.பே.இல. | - | 011-2821232 |
| தொலை நகல் | - | 011-2821213 |
| மின்னஞ்சல் | - | chairman@lankaputhra.lk |

- **இலங்கை சேமிப்பு வங்கி**

| | | |
|---|---|---|
| பதில் தலைவர் | - | திரு. எஸ். தயானந்த |
| தொ.பே.இல. | - | 011-2674700/ 11 |
| தொலை நகல் | - | 011-2674705/6 |
| மின்னஞ்சல் | - | chairman@slsbl.lk |

## சிவில் விமான சேவை பிரிவு

- **வரை. லிட்ரோ கேஸ் லங்கா நிறுவனம்**
  தலைவர் - திரு. நிசங்க நானயக்கார
  தொ.பே.இல. - 011-2327676
  தொலை நகல் - 011-2327674
  மின்னஞ்சல் - chairman@litrogas.com

- **வரை. லிட்ரோ கேஸ் டர்மினல் லங்கா (தனியார்) நிறுவனம்**
  தலைவர் - திரு. ரஜாப்டீன்
  தொ.பே.இல. - 011-2327676
  தொலை நகல் - 011-2327674
  மின்னஞ்சல் - chairman@litrogas.com

- **ஸ்ரீ லங்கன் விமான சேவை**
  தலைவர் - திரு. ரன்ஜித் பிரனாந்து
  தொ.பே.இல. - 019 -7331000
  தொலை நகல் - 019 - 7335100
  மின்னஞ்சல் - chairman@srilankan.com

## பெருந்தோட்ட மற்றும் கைத்தொழில் நிறுவனங்கள்

- **மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை**
  தலைவர் - திரு. எம். ஆர். எம். ஆப்டீன்
  தொ.பே.இல. - 011-5733406
  தொலை நகல் - 011-2446577
  மின்னஞ்சல் - raj.reliant@gmail.com

- **இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்**
  தலைவர் - திரு. திலக் மஹாநாம
  தொ.பே.இல. - 011 - 2438530
  தொலை நகல் - 011 -2438635
  மின்னஞ்சல் - slspc@sltnet.lk

- **வ/ப எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனம்**
  தலைவர் - திரு. என். டீ. மடவல
  தொ.பே.இல. - 011-2698058/ 9
  தொலை நகல் - 011-2698057
  மின்னஞ்சல் - elkaduwacmanepl@sltnet.lk

- **வ/ப குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம்**

தலைவர் - திரு. ஏ.எம். பியசோம உபாலி
தொ.பே.இல. - 037-2229618
தொலை நகல் - 037-2223191
மின்னஞ்சல் - ampupali0707@yahoo.com

- **வ/ப சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம்**

தலைவர் - திரு. ஆசிரி குமார ஹேரத்
தொ.பே.இல. - 032-2223210
தொலை நகல் - 032-2222162
மின்னஞ்சல் - cplhop@gmail.com

- **வ/ப கல்ஓயா பெருந்தோட்ட நிறுவனம்**

தலைவர் - திரு. கீர்த்தி பண்டார கொட்டகம
தொ.பே.இல. - 063-5372828
தொலை நகல் - 063-2240199
மின்னஞ்சல் - ceo@galoya.lk

- **இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம்**

தலைவர் - திரு. தம்சிறி பண்டார கருணாரத்ன
தொ.பே.இல. - 011-2871005
தொலை நகல் - 011-2884906
மின்னஞ்சல் - cashewco@dialogsl.net

- **வரை. ஹிங்குரான சீனி கைத்தொழில் நிறுவனம்**

பொது முகாமையாளர் - திரு. எம். எம். இப்திகார்
தொ.பே.இல. - 011-2368259
தொலை நகல் - 011-2368259
மின்னஞ்சல் - hsil@sltnet.lk

- **வரை. லங்கா சீனி (தனியார்) நிறுவனம்**

தலைவர் - பேராசிரியர் எச். டபல்யூ. சிறில்
தொ.பே.இல. - 011-2871005
தொலை நகல் - 011-2884906
மின்னஞ்சல் - info@iscpl.lk

- **வரை. கந்தளாய் சீனி நிறுவனம்**

முகாமைத்துவ பணிப்பாளர் - திரு. கே. பீ. நாகராஜா
தொ.பே.இல. - 011-2699888
தொலை நகல் - -
மின்னஞ்சல் - kpn@mgsugars.net

- **கரும்பு ஆராய்ச்சி நிறுவனம்**

| | | |
|---|---|---|
| தலைவர் | - | திரு. கே. ஏ. எப். கருணாசேன |
| தொ.பே.இல. | - | 011 - 4389150 |
| தொலை நகல் | - | 011 - 2785796 |
| மின்னஞ்சல் | - | |

## <u>கைத்தொழில் பிரிவு</u>

- **இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம்**

| | | |
|---|---|---|
| அதிகார சபை | - | திரு. ரியென்சி பெரேரா |
| தொ.பே.இல. | - | 011 - 4063617 |
| தொலை நகல் | - | 011 - 4506415 |
| மின்னஞ்சல் | - | ceylonceramics.co@gmail.com |

- **பீசீசீ கம்பனி**

| | | |
|---|---|---|
| தலைவர் | - | திரு. ஆர். பீ. எஸ். புஸ்பகுமார |
| தொ.பே.இல. | - | 011 - 2435195 |
| தொலை நகல் | - | 011 - 2447139 |
| மின்னஞ்சல் | - | bcclankaltd@gmail.com |

## உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 01. அறிமுகம் | 65 |
| i. அமைச்சின் நோக்கு மற்றும் செயற்பணி | 68 |
| ii. அமைச்சின் பணிகளும், பொறுப்புக்களும் | 68 |
| iii. அமைச்சின் நிறுவன அமைப்புமுறை | 70 |
| 02. அமைச்சு மற்றும் அதன் பிரிவுகள் | 71 |
| 03. அமைச்சின் விடயப் பரப்பிற்குரிய நிறுவனங்கள் | 75-80 |
| 04. அமைச்சின் முன்னேற்றம் | 81-98 |
| 05. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் முன்னேற்றம் | 99 |
| i. கைத்தொழில் பிரிவு | 101-110 |
| ii. பெருந்தோட்டக் கை த்தொழில் | 111-116 |
| 06. நிதி ஒதுக்கம் | 117--128 |

,

# 1. அறிமுகம்

# 1. அறிமுகம்

- 2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதியன்று இடம்பெற்ற பொதுத்தேர்தலை தொடர்ந்து ஏற்படுத்தப்பட்ட புதிய அரசாங்கத்தினால் 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 06 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட புதிய அமைச்சொன்றாக இதன் ஆரம்பம் அமைகின்றது.

- 2015 செப்டம்பர் 21 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 1933/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மற்றும் 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 1942/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை ஆகியவற்றில் வெளியிடப்பட்ட அமைச்சின் பணிகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய அட்டவணையின் பிரகாரம் இந்த அமைச்சுக்காக அரசாங்க தொழில்முயற்சிகள் மற்றும் குறைவான பயன்பாட்டு சொத்துக்கள் பெரும்பாலானவற்றின் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- 2008 மார்ச் 28 ஆம் திகதிய 2064/26 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மூலம், கண்டி பிராந்தியத்தில் பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை கண்காணித்து ஒருங்கிணைக்கும் பொறுப்பு இவ் அமைச்சுக்கு குறித்தொதுக்கப்பட்டது. மேலும், ஹிங்குரான சுகர் இன்டஸ்ரீஸ் லிமிடட், லங்கா சுகர் கம்பனி (பிரைவட்) லிமிடட், கந்தளே சுகர் கம்பனி (பிரைவட்) லிமிடட் மற்றும் கரும்பு ஆராய்ச்சி நிலையம் என்பன 2018 மே 12 ஆம் திகதிய 2070/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் அமைச்சுக்கு குறித்தொதுக்கப்பட்ட அதேவேளை, இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனம், அதன் துணை நிறுவனங்கள் மற்றும் இணைநிறுவனங்கள் (லிற்றோ கேஸ் லங்கா லிமிடட் மற்றும் லிற்றோ கேஸ் டேர்மினல் லங்கா (மிரைவட்) லிமிடட் தவிர) அமைச்சின் நோக்கெல்லையிலிருந்து அகற்றப்பட்டன.

- இந்த அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 24 பிரதான நிறுவனங்களும், அதன் 26 துணை நிறுவனங்களும், குறைந்த பயன்பாட்டைக்கொண்ட சொத்து தொகுதிக்குரிய 37 நிறுவனங்களும் உள்ளடக்கியுள்ளன.

- 2018.10.26 ன் அமைச்சரவை திருத்தத்தின் மூலம் 2018.11.09.வெளியிடப்பட்ட 2096/68 இலக்கத்தின் அதிவிசேட வர்த்தமானி மூலம் இந்த அமைச்சு வா்த்தக, நுகா்வோா், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சு என பெயரிடப்பட்டது.

- 2018.12.28 ல் வெளிடப்பட்ட 2103/33 ம் இலக்க அதிவிசேட வா்த்தமானி அறிவித்தலின் படி அமைச்சானது அரச தொழில் முயற்சிகள் மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சாக பெயரிடப்பட்டது.

- மேலும் 16.01.2019 ல் வெளியிடப்பட்ட அதிவிசேட வா்த்தமானி இல 2106/9 ன் படி கண்டி மாவட்டத்தின் பாரம்பரியத்தினை பாதுகாப்பதற்கான கடமைகள் அமைச்சரவைக்கு வழங்கப்பட்டது

- அரசாங்க தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சின் கௌரவ அமைச்சராக லக்ஷ்மன் கிரிஎல்லே அவர்களும், கௌரவ பிரதி அமைச்சராக எச்.எம்.எம்.ஹாரிஸ் அவா்களும், அமைச்சின் செயலாளராக திரு. ரவீந்திர ஹேவாவிதாரன அவர்களும் செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர். இவ்வமைச்சானது கொழும்பு 01, எச்லன் சதுக்கத்தில் அமைந்துள்ள உலக வர்த்தக மையத்தில் மேற்கு கோபுரத்தின் 07 வது மாடியிலும், கௌரவ அமைச்சரது அலுவலகமானது கிழக்கு கோபுரத்தின் 36 ஆம் மாடியிலும் அமைந்துள்ளன.

## 1.1. அமைச்சின் நோக்கு மற்றும் செயற்பணி

**நோக்கு**

சுபீட்சமான தேசமொன்றின் பொருட்டு வலுவான அரசாங்க தொழில்முயற்சித் தொகுதி

**செயற்பணி**

தேசிய பொருளாதாரத்திற்கு சக்தியொன்றாக நாட்டுக்கு சுமையற்ற அரசாங்க தொழில்முயற்சி கலாச்சாரமொன்றை நிர்மாணிக்கும் பொருட்டு அர்ப்பணித்தல்.

## 1.2. அரசாங்க தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சின் பணிகளும் பொறுப்புக்களும்

- அரசாங்க தொழில்முயற்சி அபிவிருத்தி விடயம் தொடர்பாக 2015.09.21 ஆம் திகதிய 1933/13 மற்றும் 2015.11.24 ஆம் திகதிய 1942/10 ஆகிய இலக்கங்களைக்கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைகளில் அரசாங்க தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள II வது நிரலில் காட்டப்படுகின்ற நியதிச்சட்டமுறை நிறுவனங்கள் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்களின் விடயங்கள் தொடர்பான கொள்கை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் திட்டமிடுதல், பின்னூட்டல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- அரசாங்க தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி துறையினுள் புதிய அறிவையும் தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.
- அரசாங்க தொழில்முயற்சிகளில் உற்பத்திகளின் தரம் மற்றும் தரச் சிறப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- தொழில்முயற்சித்துவத்தை தேசிய பொருளாதாரப் போக்குடன் இணைப்பதற்கு உபாயத்திட்டங்களைத் தயாரித்தல்.
- வினைத்திறன்மிக்க வளப் பயன்பாட்டினூடாக உள்நாட்டுத் தொழில்முயற்சிகளை தேசிய பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்காகப் பயன்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- அரசாங்க வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்குரிய பொது நிர்வாகம் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள்.
- அரசாங்க தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் 2015.09.21 ஆம் திகதிய 1933/13, 2015.11.24 ஆம் திகதிய 1942/10, 2018.03.28 இன் 2064/26 மற்றும் 2018.05.12 இன் 2070/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் 11 ஆம் நிரையில் குறிப்பீடு செய்யப்பட்ட அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரசுக்கு உரித்தான கம்பனிகள் ஆகியவற்றின் நிதியியல் முகாமைத்துவம்.
- 2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் பொதுத் திறைசேரியின் செயலாளர் வசமுள்ள 1933/13 ஆம் இலக்கம் மற்றும் 2015.09.21 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிஸக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் அரசாங்க தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள II வது நிரலில் 8 ஆவது விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 37 நிறுவனங்களின் குறைந்த பயன்பாட்டைக் கொண்ட சொத்துக்களின் புத்துயிராக்கம் சம்பந்தமாக நியமிக்கப்பட்டுள்ள உரிய அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளை செயற்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
- அரசாங்க தொழில்முயற்சிகளை முகாமை செய்வதற்காக நிறுவன ரீதியான கட்டமைப்பு ஒன்றைத் தாபித்தல்.

- அரசாங்க தொழில்முயற்சிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை.
- அரசாங்க தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் 2015.09.21 ஆம் திகதிய 1933/13, 2015.11.24 ஆம் திகதிய 1942/10, 2018.03.28 இன் 2064/26 மற்றும் 2018.05.12 இன் 2070/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் 11 ஆம் நிரையில் குறிப்பீடு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட அனைத்து விடயங்கள் தொடர்பிலுமான நடவடிக்கைகள்.
- அரசாங்க தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் 2015.09.21 ஆம் திகதிய 1933/13, 2015.11.24 ஆம் திகதிய 1942/10, 2018.03.28 இன் 2064/26 மற்றும் 2018.05.12 இன் 2070/56 ஆம் இலக்க அதிவிசேட வர்தத்மானியின் 11 ஆம் நிரையில் எடுத்துரைக்கப்பட்ட நிறுவனங்களின் மேற்பார்வை.
- கண்டி நகரின் பொருளாதார மற்றும் உட்கட்கட்டமைப்பு கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை கண்காணித்தலும் ஒருந்கிணைத்தலும்.

## 1.3. அமைச்சின் நிறுவன அமைப்புமுறை - 2018



# 2. அமைச்சின் பிரிவுகள்

## அரச தொழில்முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சும், அதன் பிரிவுகளும்

**அரச தொழில்முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சு**

தொ. பே. - 011 2437828 / 011 2437805

தொலைநகல் - 0112437823

மின்னஞ்சல் minofpubenter@gmail.com

**நிருவாகப் பிரிவு**
தொ.பே 011 2437812
தொலைநகல் 011 2437823

**கணக்குகள் பிரிவு**
தொ.பே 011 2437845
தொலைநகல் 011 2437845

**திட்டமிடல் பிரிவு**
தொ.பே. 011 2331356
தொலைநகல் 011 2437823

**உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு**
தொ.பே. 011 2331363
தொலைநகல் 011 2331373

**வங்கி மற்றும் நிதி பிரிவு**
தொ.பே. 011 2331381
தொலைநகல் 011 2331391

**பெருந்தோட்ட, விவசாய கைத்தொழில் பிரிவு**
தொ.பே. 011 3020341
தொலைநகல் 011 2331367

**சிவில் விமான சேவைகள் பிரிவு**
தொ.பே. 011 7574269
தொலைநகல் 011 2437823

# 3. இவ் அமைச்சின் கீழ் காணப்பட்ட நிறுவனங்கள்

# அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள்

➢ **<u>வங்கி மற்றும் நிதி</u>**

- இலங்கை வங்கி மற்றும் அதன் கீழ் நிருவகிக்கப்படுகின்ற 10 கம்பனிகள் மற்றும் இணைக் கம்பனிகள் 04
- மக்கள் வங்கி மற்றும் அதன் கீழ் நிருவகிக்கப்படுகின்ற 03 கம்பனிகள் (துணை நிருவாகக் கம்பனிகள் 05)
- தேசிய சேமிப்பு வங்கி மற்றும் அதன் கீழ் நிருவகிக்கப்படுகின்ற கம்பனி
- அரச ஈட்டு முதலீட்டு வங்கி
- பிரதேச அபிவிருத்தி வங்கி
- லங்கா புத்ர அபிவிருத்தி வங்கி
- இலங்கை சேமிப்பு வங்கி

➢ **<u>காப்புறுதி, சிவில் விமான சேவைகள் மற்றும் விருந்தோம்பல் சேவைகள்</u>**

- வரை. லிட்ரோ கேஸ் லங்கா நிறுவனம்
- வரை. லிட்ரோ கேஸ் டமினல் லங்கா (தனியார்) நிறுவனம்
- ஸ்ரீலங்கன் விமான சேவை மற்றும் அதன் நிருவகிக்கப்படுகின்ற 01 கம்பனி

➢ **<u>பெருந்தோட்டங்கள் மற்றும் விவசாய அடிப்படையிலான கைத்தொழில்கள்</u>**

- மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை
- இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம்
- வரை. எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனம்
- வரை. குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம்
- வரை. சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம்
- வரை. கல்ஓயா பெருந்தோட்ட நிறுவனம்
- இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம்
- வரை. ஹிங்குரான சீனி கைத்தொழில் நிறுவனம்
- வரை. லங்கா சீனி (தனியார்) நிறுவனம் மற்றும் அதன் நிருவகிக்கப்படுகின்ற 02 கம்பனிகள்
- வரை. கந்தலாய் சீனி நிறுவனம்
- கரும்பு ஆராய்ச்சி நிறுவனம்
- அரச வள முகாமைத்துவ கூட்டுத்தாபனம்

○ **<u>கைத்தொழில்</u>**

- இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனம்
- பிசீசீ கம்பனி

# அமைச்சின் கீழ் காணப்பட்டதும், தமக்குக் கீழ் நிருவகிக்கப்படுகின்ற கம்பனிகளைக் கொண்டதுமான நிறுவனங்கள்

**<u>இலங்கை வங்கி</u>**

- புரபர்டி டிவலப்மன்ட் பி.எல்.சி.
- மர்சன்ட் பேன்க் ஒவ் ஸ்ரீலங்கா என்ட் பைனான்ஸ் பிஎல்சி
- வரை. பிஓசி டிரவல்ஸ் தனியார் கம்பனி
- வரை. பிஓசி மெனேஜ்மன்ட் என்ட் சப்போர்ட் சர்விசஸ் தனியார் கம்பனி
- வரை. பிஓசி புரபர்டி டிவலப்மன்ட் என்ட் மெனேஜ்மன்ட் தனியார் கம்பனி
- வரை. ஹொடெல் கலம்பு (1963) கம்பனி
- வரை. சீபேன்க் ஹொலிடே ஹோம்ஸ் தனியார் கம்பனி
- வரை. எம்பி.எஸ்எல் இன்சுவரன்ஸ் கம்பனி
- வரை. கொலதெனிய ஹைட்ரோபவர் தனியார் கம்பனி
- வரை. இலங்கை வங்கி (யுகெ) கம்பனி

**இணைக் கம்பனிகள்**

- வரை. லங்கா சிக்குரிடீஸ் தனியார் கம்பனி
- வரை. டிரான்ஸ்நெசனல் லங்கா ரெகோட்ஸ் சொலுசன்ஸ் தனியார் கம்பனி
- வரை. மிரேகா கெப்பிரல் லேன்ட் தனியார் கம்பனி
- வரை. சீ பேன்க் எசட் மெனேஜ்மன்ட் கம்பனி

**<u>மக்கள் வங்கி</u>**

- பீபல்ஸ் லீசிங் என்ட் பைனான்ஸ் பிஎல்சி
    - பீபல்ஸ் இன்சுவரன்ஸ் பிஎல்சி
    - பீபல்ஸ் மைக்ரோ பினான்ஸ் லிமிடட்
    - பீபல்ஸ் லீசிங் புரபர்டி டிவலப்மன்ட் லிமிடட்
    - பீபல்ஸ் பிலீட் மெனேஜ்மன்ட் லிமிடட்
    - பீபல்ஸ் ஹெவ்லொக் புரபர்டீஸ் லிமிடட்
- பீபல்ஸ் மர்சன்ட் பைனான்ஸ் பிஎல்சி
- பீபல்ஸ் டிரவல்ஸ் தனியார் கம்பனி

**<u>தேசிய சேமிப்பு வங்கி</u>**

- என்எஸ்பி. பன்ட் மெனேஜ்மன்ட் கம்பனி லிமிடட்

**ஸ்ரீலங்கன் விமான சேவை**

- ஸ்ரீலங்கன் கேடரிங்

**வரை. லங்கா சீனி (தனியார்) நிறுவனம்**

- பெல்வத்த சீனி கைத்தொழில் நிறுவனம்
- செவனகல சீனி கைத்தொழில் நிறுவனம்

**2011 இன் 43 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் பொதுத் திறைசேரியின் செயலாளருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள 1933/13 ஆம் இலக்க 2015.09.21 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் காணப்படுகின்ற குறைப் பயன்பாட்டுச் சொத்துக்கள்.**

| | | |
|---|---|---|
| I. | ஹோட்டல் டிவலொபர்ஸ் லங்கா விமிட்டட் | *** |
| II. | புறக்கோட்டையில் அமைந்துள்ள ஆதனம் - சாமர்ஸ் களஞ்சியம் | * |
| III. | புறக்கோட்டை மற்றும் நாராஹேன்பிட்டியில் அமைந்துள்ள ஆதனம் - லங்கா டிரக்டர்ஸ் லிமிடட் | * |
| IV. | கொல்லுப்பிட்டியில் அமைந்துள்ள ஆதனம் - மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் முன்னர் காணப்பட்ட காணி | * |
| V. | பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஆதனம் - சுசீர் நெப் புரொஜெக்ட்ஸ் பிரைவட் லிமிடட் | * |
| VI. | கொல்லுப்பிட்டியில் அமைந்துள்ள ஆதனம் - செலின்கோ லெசர் புரொபர்டீஸ் லிமிடட் | * |
| VII. | வரையறுக்கப்பட்ட பெலவத்த சீனிக் கம்பனி | *** |
| VIII. | வரையறுக்கப்பட்ட செவணகல சீனிக் கம்பனி | *** |
| IX. | பதுளையில் அமைந்துள்ள ஆதனம் - கலம்பு கொமர்சல் கம்பனி | *** |
| X. | சீனோ ரெக்ஸ் லங்கா லிமிடட் | ** |
| XI. | ஜெக லங்கா லிமிடட் | ** |
| XII. | பிலைமன் இன்டஸ்ரீஸ் (பிரைவட்) லிமிடட் | ** |
| XIII. | கொஸ்மோஸ் மெக்கி இன்டஸ்ரீஸ் | ** |
| XIV. | காபூல் லேஸ் (பிரைவட்) லிமிடட் | ** |
| XV. | இன்டர் டிரேட் லங்கா (பிரைவட்) லிமிடட் | * |
| XVI. | சீதா பெசன்ஸ் (பிரைவட்) லிமிடட் | ** |
| XVII. | டி.சி. எபரல் (பிரைவட்) லிமிடட் | ** |
| XVIII. | நீடில் கிராவ்ட் (பிரைவட்) லிமிடட் | ** |
| XIX. | ஹை பை பெசன் காமன்ட் (பிரைவட்) லிமிடட் | ** |
| XX. | கொலின்ஸ் காமன்ட் (பிரைவட்) லிமிடட் | ** |
| XXI. | ரூகுணு புதா எபரல்ஸ் (பிரைவட்) லிமிடட் | ** |
| XXII. | சன்ஜய காமன்ட் (பிரைவட்) லிமிடட் | ** |
| XXIII. | மெக்பா எபரல் (பிரைவட்) லிமிடட் | ** |
| XXIV. | யொஹிதா எசோசியேட்ஸ்(பிரைவட்) லிமிடட் | ** |
| XXV. | டயனமிக் குலோதிங்(பிரைவட்) லிமிடட் | ** |
| XXVI. | 609 பொலிமர் எக்ஸ்போட்ஸ் (பிரைவட்) லிமிடட் | ** |
| XXVII. | கொஸ்கோ பொலிமர் லங்கா (பிரைவட்) லிமிடட் | ** |
| XXVIII. | கிரேட் வோல் திரெட் மெனுபெக்சரின் (பிரைவட்) லிமிடட் | ** |
| XXIX. | ஆதம்ஜி எக்ஸ்டிரக்சன்ஸ்(பிரைவட்) லிமிடட் | ** |
| XXX. | டாடா புட் (பிரைவட்) லிமிடட் | ** |
| XXXI. | ரென்ரன் லங்கா(பிரைவட்) லிமிடட் | ** |
| XXXII. | ரிகான் லங்கா (பிரைவட்) லிமிடட் | ** |
| XXXIII. | கொம்போஸ்ட் ரவர் சொலியுசன்ஸ் (பிரைவட்) லிமிடட் | ** |
| XXXIV. | ஹேல்த் புட் பிரடக்ட்ஸ் (பிரைவட்) லிமிடட் | ** |
| XXXV. | ஸ்ரீ விராக் (பிரைவட்) லிமிடட் | ** |
| XXXVI. | ரோயலி எக்ஸ்போர்ட்ஸ் (பிரைவட்) லிமிடட் | ** |
| XXXVII. | கொன்டிரென்ரல் வனஸ்பதீ (பிரைவட்) லிமிடட் | ** |

* - நகர அபிவிருத்தி அதிகார சபைக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள்

** - முதலீட்டு மேம்படுத்தல் சபைக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள்

*** - ஏனையன

# 4. அமைச்சின் முன்னேற்றம்

## 4. 2018 ஆம் ஆண்டுக்கான அமைச்சின் செயற்திறன் அறிக்கையை அறிமுகம்

- அரச தொழிற்முயற்சிகளில் காணப்படும் எதிர்கால அபாயங்கள் மற்றும் பாதகமான நடைமுறைகளை கண்டறிதல் மற்றும் கட்டுப்படுத்துவதற்கான புதிய மூலோபாய செயற்பாடுகள் கண்டறிவதனூடாக அரச தொழிற்முயற்சிகள் அமைப்புக்குள் புதியதொரு திருப்புமுனையை ஏற்படுத்துவது அமைச்சின் பொறுப்பாகும். அதே போன்ற பொருளாதார ரீதியாக நட்டங்களை எதிர்க்கொள்ளும் அரச தொழில்முயற்சிகளைக் கண்டறிந்து அவற்றை மொத்த தேசிய உற்பத்திகள் பங்களிப்பை வழங்கக் கூடிய விதத்தில் மீள மைப்பதற்கு தேவையான செயல்முறைகளை கண்டறிதல் மற்றும் அவற்றுக்குத் தேவையான நடைமுறைகளை மேற்கொள்ளுதல் அமைச்சின் விடயப்பரப்பிற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

- அரசாங்க தொழில் முயற்சிகளிலுள்ள எதிர்கால இடர்நேர்வுகளை இனங்காணுதல் மற்றும் அவற்றை தடுப்பதற்காக புதிய உபாய நடவடிக்கைகளை அடையாளப்படத்தல் மூலம் அரசாங்க தொழில்முயற்சித் துறைக்கு புத்துயிரளிப்பதற்கு அமைச்சு பொறுப்புடையதாகும். பொருளாதார ரீதியாக இலாபகரமற்ற அரசாங்க தொழில்முயற்சிகளை இனங்கண்டு அவற்றை மீள்கட்டமைப்பதற்கு அவசியமான முறைகளை இனங்காணுதல் இதன்மூலம் ஒட்டுமொத்த பொருளாதாரத்திற்கும் பங்களித்தலும் இவ் அமைச்சுக்கு குறித்தொதுக்கப்பட்ட பொறுப்பொன்றாகும்.

- 2015.09.21 ஆம் திகதிய 1933/13, 2015.11.24 ஆம் திகதிய 1942/10, 2018.03.28 இன் 2064/26 மற்றும் 2018.05.12 இன் 2070/56 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதிவிசேட வர்தத்மானியில் வெளியிடப்பட்ட அமைச்சுகளின் பொறுப்புகள் மற்றும் கடமைகள் பற்றிய அட்டவணைக்கமைவாக அரசாங்க தொழில் முயற்சிகள் மற்றும் அதிக எண்ணிக்கையான பயன்படுத்தப்படாத சொத்துகள் தொடர்பான பொறுப்பு இவ் அமைச்சுக்கு குறித்தொகுக்கப்பட்டுள்ளது. அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 24 பாரிய நிறுவனங்களையும் 26 துணைநிறுவனங்களையும் பயன்படத்தப்படாத சொத்து வகையின் கீழ் 37 நிறுவனங்களையும் உள்ளடக்குகின்றது.

- அமைச்சுக்குரிய தாபனங்கள் பின்வரும் பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

1. வங்கி மற்றும் நிதியியல் பிரிவு
2. விமானசேவைகள் பிரிவு
3. பெருந்தோட்டம், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில் மற்றும் கைத்தொழில் பிரிவு

2018 வருடத்துக்கான இவ்வமைச்சின் கீழுள்ள பிரிவுகளின் செயலாற்றுகை மற்றும் 2018 ஆம் ஆண்டுக்கான நடவடிக்கைத்திட்டம் தொடர்பான தகவல்கள் கீழ் வருமாறு

### 4.1. நிர்வாகப் பிரிவு

அமைச்சின் அனைத்துப்பிரிவுகளிலும் பணியாற்றும் ஊழியர்களின் நிர்வாக நடவடிக்கைகளை நிர்வாகபிரிவானது நிர்வகித்து வருகின்றது.

2018 ஆம் ஆண்டில் நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

- **அமைச்சின் கீழுள்ள தாபனங்களின் சட்டரீதியான பின்னணிகள் தொடர்பான தகவல்களைத் திரட்டுதல் மற்றும் அட்டவணைப்படுத்துதல்.**

இந்த அமைச்சின் கீழுள்ள தாபனங்கள் மற்றும் அதன் கீழ் காணப்படுகின்ற துணை நிறுவனங்களுடன் 47 தாபனங்களின் சட்டரீதியான பின்னணிகள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்காக அக்குறித்த தாபனங்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டிருப்பதுடன், அதற்கமைய இப்போதாகும்போது பெருந்தோட்டப் பிரிவுக்குரிய ஹிங்குரானை சசீனித்

தொழிற்சாலை, லங்கா சீனி தொழிற்சாலை மற்றும் கரும்பு ஆலைத்தொழிற்சாலை நிறுவனம் தவிர்ந்த அனைத்து தாபனங்களுக்குரிய தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

- **வெளிவாரிப் பயிற்சிகள்**

அமைச்சின் 48 அலுலர்களின் பங்களிப்பினால் எல்கெடுவ பெருந்தோட்டக் கம்பனியிற்குரிய மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள செம்புவத்தை பயிற்சி நிலையத்தில் 2018.06.22 ஆந் திகதி முதல் 24 ஆந் திகதி வரை மூன்று நாள் தலைமைத்துவ பயிற்சி செயலமர்வு நடாத்தப்பட்டதுடன், அதற்காக ரூபா 613,492/- ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.

அங்கு அமைச்சின் நான்கு குழுக்களாக வகைப்படுத்தப்பட்டு, அவர்களுக்காக 11 குழு செயற்பாடுகள் வழங்கப்பட்டன. அதற்காக புள்ளிகள் வழங்கப்பட்டதுடன், சிறந்த குழு மற்றும் அதியுயர் திறமைகளைக் காட்டிய அலுவலர்கள் மூவர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அதற்கு மேலதிகமாக அலுவலர்களின் உடல் ஆரோக்கியம் தொடர்பாக உடற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டமும் இடம்பெற்றது.







- **குறுகியகால பயிற்சி திட்டம்**

2018ம் ஆண்டில் அமைச்சினால் 12 உத்தியோகத்தர்கள் ரூபா 100,000/= பெறுமதியான குறுகிய காலபயிற்சித்திட்டம் வழங்கப்பட்டது

- **நீண்டகால பயிற்சி திட்டம்**

2018ம் ஆண்டில் மேலும் 3 உத்தியோகத்தர்கள் ரூபா 270,000/= பெறுமதியான நீண்டகால பறிற்சி நெறி வழங்கப்பட்டது.

- **வெளிநாட்டு பயிற்சி பாடநெறி**

2018 ஆம் ஆண்டில் அமைச்சின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் மூவர் வெளிநாட்டு பயிற்சி பாடநெறிகளுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். அதற்கான பாடநெறிக் கட்டணமாக ரூபா 2,364,800 ஆன தொகை செலவு செய்யப்பட்டுள்ளது.

- **நடைமுறப்பயிற்சிக்கு பயிற்றுவிப்பாளர்களின் ஆட்சேர்ப்பு**

2018ம் ஆண்டில் 3 தொழில்நுட்பபயிற்சியாளர்களும் 4 பயிலுனர் பட்டதாரி மாணவர்களும் நடைமுறைப்பயிற்சிக்காக ரூபா 350,000/= பெறுமதியளிவில் இணைத்துக் ொகள்ளப்பட்டனா்.

## 4.2. அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவு

### 4.2.1. அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள தாபனங்களின் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடாத்துதல்.

2018 ஆம் வருடத்துக்குரிய அமைச்சு தொடர்பில் தயாரிக்கப்பட்ட செயல்பாட்டு திட்டத்திற்கு இயைவாக ஒவ்வொரு பிரிவுகளால் உரிய நடவடிக்கைகள் நிறைவேற்றுவது தொடர்பான அவதானிப்பு மற்றும் காலாண்டு ரீதியான முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் நடாத்துதல்
இங்கு ஆரம்ப மற்றும் இரண்டாம் காலாண்டுக்கான முன்னேற்ற மீளாய்வு இரு கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

2018 ம் ஆண்டின் மூன்று மன்யேற்றக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

- **அமைச்சின் கீழுள்ள தாபனங்களுக்கு உரியவாறு அடையாளங் காணப்பட்ட ஆரம்ப செயலாற்றுகை குறிகாட்டிகளுக்கு இயைவான முன்னேற்றம் மீளாய்வு செய்தல்.**

சர்க்கரை நிறுவனங்கள் அனைத்தும் கைகோர்த்து 12.05.2018 வெளியிட்ப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் இல2070/56ன் படி இணைக்கப்பட்ட ஹிங்குராணை சினித் தொழிற்சாலை லங்கா சீனித் தொழிற்சாலை, கந்தளாய் சீனித் தொழிற்சாலை கரும்புத் தொழிற்சாலைகள் ஒன்றிணைந்து 26.10.2018 உடவளவையில் சீனித் தொழிற்சாலை எதிர் கொள்ளும் சவால்கள் பற்றி ஆயவும் தீர்மானம் மேற்கொள்ளவும் செய்ற்பாட்டுக் கூட்டம் ஒன்று நடாத்தப்பட்டது..



### 4.2.2. 2017 வருடத்தில் செயலாற்றுகைத் தொடர்பான அறிக்கை தயார் செய்தல்.

2017 ஆம் நிதி வருடத்தின் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள தாபனங்களின் செயலாற்றுகை காட்டப்பட்ட 2017 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை 2018 மே மாதம் 31 ஆந் திகதி தயாரிக்கப்பட்டு இலங்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்த வருடத்திக்குரிய அறிக்கையின் 150 வன்பொருள் பிரதிகள் மற்றும் 400 மென்பொருள் பிரதிகள் அச்சிடப்பட்டிருப்பதுடன். இதங்காக ரூபா 629,000 நிதி செலவு செய்யப்பட்டுள்ளது.

## 4.3. வங்கி மற்றும் நிதியியல் பிரிவு

- அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு அரச வங்கிகளின் குறைந்தபட்ச ஒதுக்கீட்டுப்பெறுமதி தொடர்பாக சிறந்த முறையில் தொடர்ந்தும் மேற்பார்வை செய்து வருவதுடன் இடர்பாடுகள் அவதானிக்கப்படுமாயின் அக்காரணம் தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்படும். வீடமைப்பு மற்றும் நிதிக் கூட்டுத்தாபன வங்கி 2018.05.12 ஆம் இலக்கம் கொண்ட விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் நோக்கெல்லைக்குரியதாக இருப்பினும் அது இந்த அமைச்சின் கீழ் இருந்த காலப்பகுதிக்குள் வங்கியின் ஒழுங்குபடுத்தும் தேவைப்பாடுகள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சி இலக்குகளை எய்தும் பொருட்டு ரூபா 1.4 பில்லியன்கள் மேலதிக மூலதன முதலீடு செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.
- சிறிய அரச வங்கிகள் ஒழிப்புக்கான 2015 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைய பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவை உப குழுவினால் (CCEM) எடுக்கப்பட்ட முடிவின் பிரகாரம் அமைச்சினால் இந்த தாபனங்கள் ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக அக்குறித்த தாபனங்களுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதற்கமைய,

  I. பிரதேச அபிவிருத்தி வங்கி மற்றும் லங்கா புத்ர அபிவிருத்தி வங்கி ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இப்போதாகும்போது இயலளவை மதிப்பிடும் மற்றும் ஒருங்கிணைக்கும் தொழிற்பாட்டில் தற்போதுள்ள சட்டரீதியான பிரச்சினைகள் தொடர்பாக தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதன் இறுதிக்கட்டதையும் நெருங்கி வந்துள்ளது.

  II. தேசிய சேமிப்பு வங்கி மற்றும் இலங்கை சேமிப்பு வங்கி ஒருங்கிணைப்பதற்குரிய அறிக்கை இலங்கை மத்திய வங்கிக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது.

- சட்ட வரைஞரினால் தயாரிக்கப்பட்ட 1961 ஆம் ஆண்டு 29 ஆம் இலக்கம் கொண்ட மக்கள் வங்கி திருத்த சட்ட வரைவு மூலம் மற்றும் அதன் சட்டரீதியான பெறுபேறு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் என்ற மும்மொழிகளில் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

- கண்டி நிர்வாக மாவட்டத்தில் ஏற்பட்ட குழப்பகரமான சம்பவம் காரணமாக சேதமடைந்த வியாபார சொத்துக்களுக்காக நிவாரணம் வழங்கும் பொருட்டு சலுகை அடிப்படையிலான வட்டி விகிதாசரத்தின் அடிப்படையில் கடன் வழங்குவதற்காக ‘‘அத்வெல கடன்’’ முன்மொழியப்பட்டது. அதன்படி ரூபா ஒரு மில்லியன் வரையிலான கடன் தொகையை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

## 4.4. சிவில் விமான துறை

- **ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் லிமிடட் இனை மீள்கட்டமைத்தல்**

ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ், 10 வருடங்களுக்கு மேல் நிதியியல் நட்டங்களுக்காக திரண்ட உயர்ந்த படுகடன் பிரச்சினையினை அனுபவித்தது. எனவே, அமைச்சரவை, தேசிய விமான நிறுவனத்திற்கான முன்னோக்கிய வழிகளை கண்டறிவதற்கும் மீள்கட்டமைப்புத் திட்டமொன்றினை தயாரிப்பதற்கும் ஸ்ரீ லங்கன் எயார்லைன் இனை அறிவுறுத்துவதற்கும் அமைச்சரவை குழுவினையும் அலுவலர் குழுவினையும் நியமித்தது.

அதற்கமைய, ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் இற்கான மீள்கட்டமைப்பு திட்டம் சர்வதேச விமானத்துறை ஆலோசக நிறுவனமான நைராஸ் உதவியுடன் தயாரிக்கப்பட்டு புதிய பணிப்பாளர் சபையினால் தற்போது அங்கீகரிக்கப்பட்டள்ளது. இது விரைவில் அமைச்சரவையின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

மீள்கட்டமைப்புத் திட்டத்தின் முக்கிய கருதுகோள் ''வளர்ச்சிக்காக சுருக்குதல்'' என்பதுடன் ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் பங்களிப்பினை மேம்படுத்துவதற்கு அதன் வலையமைப்பினை திரட்டுதல், அதன் விமானத்தொகுதி பொறுப்புகளை பேரம்பேசுதல், நிறுவனத்தை சரியான அளவுப்படுத்தல் மற்றும் படுகடன், வரிகள் மற்றும் எரிவொருள் தொடர்புபட்ட பிரச்சினைகளை தீர்த்தல் என்பவற்றை செய்யவேண்டியுள்ளது.

மீள்கட்டமைப்பின் அடுத்த அடிப்படை இலக்கு அரசாங்க தனியார் பங்குடமை முயற்சியொன்றின் ஊடாக ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் இற்கான பொருத்தமான பங்குரிமைப் பங்காளரொருவரைத் தேடுவதாகும். திட்டத்தின் நடைமுறைப்படுத்தலானது அதன் பின்னர் ஆரம்பிக்கும் என்பதுடன் மீள்கட்டமைப்பின் முழுமையான நன்மைகளையும் பெறுவதற்கு குறைந்தது 2 அல்லது 3 வருடங்கள் எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- **ஹில்டன் ஹோட்டல் கொழும்பு மற்றும் கிரான்ட் ஹயாட் கொழும்பு என்பவற்றின் உரிமையினை மீள்கட்டமைத்தல்.**

ஹில்டன் ஹோட்டல் கொழும்பு மற்றும் கிரான்ட் ஹயாட் கொழும்பு என்பவற்றின் இலங்கை அரசாங்கத்தின் உரிமையினை பன்முகப்படுத்துவதற்காக 2017 ஆகஸ்ட் 01 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

அதற்கமைய, ஹில்டன் ஹோட்டல் கொழும்பு மற்றும் கிரான்ட் ஹயாட் கொழும்பு என்பவற்றிற்கு உபாய பங்காளிகளை தேடுவதற்கு கொடுக்கல் வாங்கல் ஆலோசருக்கான முன்மொழிவுக்கோரிக்கை அழைக்கப்பட்டது. அமைச்சரவை நியமித்த ஆலோசகர் பெறுகைக் குழு நியமிக்கப்பட்டு கிடைக்கப்பெற்ற முன்மொழிவுக்கோரிக்கைகளை அமைச்சரவை நியமித்த ஆலோசகர் பெறுகைக் குழுவானது மதிப்பீடு செய்துள்ளது. அதன்படி அவ் கொடுக்கல் வாங்கல் ஆலோசராக சிங்கப்பூரின் லஸார்ட் ஏசிய லிமிடட் இனை குழு பரிந்துரைத்துள்ளது.

அதேவேளை, 2018.03.28 ஆம் திகதிய 2064/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் நியதிகளின்படி கிரான்ட் ஹயாட் கொழும்பு, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் மேற்பார்வையின் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டதுடன் 2018.05.22 ஆம் திகதிய 2017/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் நியதிகளின்படி கிரான்ட் ஹயாட் கொழும்பு, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் மேற்பார்வையின் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டது. எனவே தொடர்புடைய ஆவணங்கள் குறித்த அமைச்சுக்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளன.





**கிரான்ட் ஹயாட் ஹோட்டல் கொழும்பு முன்மொழியப்பட்ட மீள்கட்டமைப்பு கருத்திட்டம்**

- **மிஹின் லங்காவினை தீர்த்துக்கட்டுதல்**

அமைச்சரவையானது 2017 ஒக்டோபர் 31 ஆம் திகதிய அமை/17/2383/733/026-I ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் மிஹின் லங்கா பிரைவட் லிமிடட் நிறுவனத்தினை தீர்த்துக்கட்டுவதற்கு அறிவுறுத்தியது. அதற்கமைய, தீர்த்துக் கட்டுதல் வழக்கு இலங்கை வர்தத்க நீதிமன்றத்தில் கோவைப்படுத்தப்பட்டதுடன் நிரந்தர தீர்த்துக்கட்டுபவர் ஒருவரை நீதிமன்றம் நியமித்தது. தீர்த்துக்கட்டுபவர் விவகாரங்கள் பற்றிய முடிவு அறிக்கையினை தயாரிப்பதனை முன்னெடுக்கின்றார்.

2018.11.05 விசேட வர்த்தமானி அறிவித்தல் இல 2096/17 ன் படி மிஹின் லங்கா நிறுவனமானது போக்குவரத்து மற்றும் சிவில் விமானத்துறை அமைச்சின் கீழ் பெயரிடப்பட்டது ஆகவே 11.12.2018 அன்று அனைத்து தரவுகளும் அமைச்சிடம் கையளிக்கப்பட்டது

## 4.5. பெருந்தோட்ட பிரிவு

பெருந்தோட்டம் மற்றும் கைத்தொழில் பிரிவு மூலம் பின்வரும் தொழில்முயற்சிகள் மேற்பார்வை செய்யும் அதேவேளை, 2018 இற்கான செயற்திறன் கீழ் வருமாறு:

- மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை
- இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம்
- எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி
- குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி
- சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி
- கல்ஓயா பெருந்தோட்டக் கம்பனி
- இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம்
- ஹிங்குரான சீனி கைத்தொழிற்சாலைக் கம்பனி
- கந்தளாய் சீனி கம்பனி
- கரும்பு ஆராய்ச்சி நிறுவனம்
- இலங்கை பீங்கான கூட்டுத்தாபனம்
- பீசிசி லங்கா கம்பனி

- **பெருந்தோட்டக் கம்பனிகள் மறுகட்டமைப்பு**

23.11.2017 ம் ஆண்டு வெளியீடப்பட்ட அமைச்சரவைக் குறிப்பின் படி பொதுத்திறை நிறுவனத்திற்கு பங்களிப்பு செய்வதற்கு மக்கள் அபிவிருத்தி தோட்ட சபை, இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம்,வரையறுக்கப்பட்ட எலகடுவ பெருந்தோட்ட நிறுவனம், வரை.குருநாகல பெருந்தோட்ட நிறுவனம், வரை.சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம், மற்றும் இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் என்பன இணைக்கப்பட்டன. 12.01.2018 அமைச்சரவையின் தீர்மானத்தை கொண்டு இழப்பு நிறுவனங்களான மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை, இலங்கை அரச பெருந்தோட்டங்கள் சபை மற்றும் வரை.எலகடுவ பெருந்தோட்ட நிறுவனம் போன்றவை மறுசீரமைப்பு திட்டத்திற்கு உட்படுத்தப்பட்டன.

மறுகட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தினூடாக அடையாளங் காணப்பட்ட குறைபயன்பாட்டு மற்றும் பாவனை செய்யப்படாத காணிகள் பொருளாதார நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவதற்கு பொருத்தமான முதலீட்டாளர்களைத் கண்டறிவதற்காக அமைச்சின் வழிக்காட்டலின் மூலம் உரிய பெருந்தோட்டக் கம்பனிகளின் மூலம் ஆர்வ வெளிப்பாடுகளை அழைத்தல் (EOI) மற்றும் முன்மொழிவுகளை அழைத்தல் (RFP) மேற்கொள்ளப்பட்டுள்ளன. கௌரவ அரச தொழில்முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சரின் மற்றும் அமைச்சு செயலாளரின் கொள்கை வாரியான வழிகாட்டல்களின் கீழ் பெருந்தோட்ட மற்றும் கைத்தொழில் பிரிவினால் மதியுரைச் சேவைகள், கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் நடாத்தப்பட்டு இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்காக வசதிகள் வழங்கப்பட்டது. உரிய தொழிற்பாட்டின்போது பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு முன்வைக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கு பொருத்தமானமைக்கு அடையாளங் காணப்பட்ட சிறிய மற்றும் பெரிய அளவினாலான முன்மொழிவுகள் எண்ணிக்கை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| | **பெருந்தோட்டக் கம்பனி** | **சிறிய அளவினாலான முன் மொழிவுகளின் எண்ணிக்கை** | **பெரிய அளவினாலான முன் மொழிவுகளின் எண்ணிக்கை** | **மொத்த முன் மொழிவுகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| 1. | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை | 127 | 29 | 156 |
| 2. | இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம் | 42 | 04 | 46 |
| 3. | எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி | 50 | 04 | 54 |
| | **கூட்டுத்தொகை** | **219** | **37** | **256** |

பெருந்தோட்ட மதியுரைக் குழுவால் மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன், அமைச்சு நிபுணர் குழுவின் மதியுரையாளர்கள் அதற்காக உதவியாக இருந்தனர் மேலும் நிதி அமைச்சின குறிப்புக்கள் மற்றும் அமைச்சகத்தின் குறிப்புக்ள் அமைச்சரவை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- **பெருந்தோட்டக் கம்பனிகளில் நிலைப்பாட்டிற்காக உதவுதல்**

வறட்சி மற்றும் முகாமைத்துவ சிக்கல்கள் காரணமாக மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை, இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம், எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி போன்ற நிறுவனங்கள் அவர்களது நிதி ஓட்டம் தொடர்பான சிக்கல்களுக்கு முகங்கொடுக்கின்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் திறைசேரியினூடாக நிதி உதவிகளை வழங்குவதனூடாக உரிய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு உதவுவதற்கு அமைச்சு நடவடிக்கையெடுத்துள்ளது.

| | **பெருந்தோட்டக் கம்பனி** | **வழங்கப்பட்டுள்ள திறைசேரி ஏற்பாடுகள் சனவரி முதல் ஜூன் வரை (ரூ.மி)** |
|---|---|---|
| 01. | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை | 43 |
| 02. | இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் | 270 |
| 03. | எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி | - |
| | கூட்டுத்தொகை | 313 |

- **ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய மற்றும் வேறு நியதிச்சட்ட கொடுப்பனவுகள் தீர்ப்பதற்கான செய்முறைத்திட்டத்தை தயாரிப்பதற்கு வசதிகளை ஏற்படுத்துதல்.**

இந்த அமைச்சின் மதியுரையின் அடிப்படையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் மூலம் 2016 ஆம் ஆண்டு சனவரி மாதத்திலிருந்தும், எல்கட்டுவ பெருந்தோட்டக் கம்பனி மூலம் 2016 ஆம் ஆண்டு ஜுன் மாதத்திலிருந்தும், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் மூலம் 2017 ஆம் ஆண்டு ஜுன் மாத்திலிருந்தும் தற்போதைய கால எல்லைக்குரிய ஊழியர் சேமலாபநிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்புநிதி செலுத்தப்படும்.
ஊழியர் சேமலாபநிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி தீர்ப்பதற்காக அக்குறித்த தாபனங்களில் பண ஓட்டம் தோற்றுவிப்பது தொடர்பில் மரங்களை வெட்டும் நிகழச்சித்திட்டம் துரிதப்படுவதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக தேவையான வசதிகள் அமைச்சின் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் நிலுவை ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி மற்றும் ஏனைய நியதிச்சட்ட கொடுப்பனவுக்காக மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியால் அமைச்சின் உதவியுடன் செயல்பாட்டுத் திட்டமும் தயார்படுத்தப்பட்டிருப்பதுடன் இது தொடர்பாக அமைச்சின் மூலம் வழக்கமான மேற்பார்வையும் இடம்பெறும்.

இந்த பெருந்தோட்டக்கம்பனிகளில் நிலுவை ஊழியர் சேமலாபநிதி மற்றும் நம்பிக்கை பொறுப்புநிதி தீர்ப்பதற்காக திறைசேரி ஏற்பாடுகளை வழங்குவதற்காகவும் இந்த அமைச்சின் மூலம் நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளவாறு பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு நிதி ஏற்பாடுகளைப் வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளன.

**(ரூ.மி)**

| | பெருந்தோட்டக் கம்பனிகளின் பெயர் | 2016 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ள நிதி | 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ள நிதி | 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ள நிதி | செலுத்தப்பட்டுள்ள மொத்த திறைசேரி ஏற்பாடுகள் |
|---|---|---|---|---|---|
| 01. | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை | 30 | 305 | 114 | 449 |
| 02. | இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் | - | 134 | 155 | 289 |
| 03. | எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி | - | 107 | 95 | 202 |
| | **கூட்டுத்தொகை** | **30** | **546** | **364** | **940** |

- **பெருந்தோட்டக் கம்பனிகளில் மரம் வெட்டும் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்**

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை , இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி, சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி, குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி போன்ற பெருந்தோட்டக் கம்பனிகளின் மரங்களை வெட்டுவதற்கு முன்னர் அமைச்சின் அங்கீகாரம் பெறவேண்டியமைக்கு பெருந்தோட்டங்கள் கம்பனிகள் விழிப்பூட்டப்பட்டுள்ளன. அதற்கமைய சகல பெருந்தோட்டக் கம்பனிகளால் மரங்களை வெட்டுவதற்கு முன்னர் அமைச்சின் அலுவலர்களால் கள ஆராய்ச்சிக்குட்படுத்தப்பட்டு அதற்காக அங்கீகாரம் வழங்குவது இடம்பெறும்.
அதற்கமைய பெருந்தோட்டக் கம்பனிகளில் மரங்களை வெட்டுவது தொடர்பாக சரியான மேற்பார்வை இந்த அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படும்.

இந்த வருடத்துக்குள் இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 02 கள ஆராய்ச்சிகள், குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியின் கள ஆராய்ச்சி 01 உம் மற்றும் சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் கள ஆராய்ச்சி 01 உம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.




(அமைச்சின் அலுவலர்களாலான குழு மூலம் பெருந்தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமான தோட்டங்களில் மரங்கள் வெட்டுவதற்கான களப்பணி ஆராய்ச்சி மேற்கொள்ளுதல்.)

- **தோட்டத் தொழிலாளர்களின் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்துக்கு காணியுறுதிகளை வழங்குவதற்காக தேவையான வழிகாட்டல் மற்றும் வசதிகளை ஏற்படுத்துதல்.**

மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சினால் சமர்பிக்கப்பட்ட 17/1323/36/00-1 ஆம் இலக்கம் கொண்ட அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பாக அமைச்சரவை முடிவுக்கமைய தோட்டத் தொழிலாளர்களின் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்துக்காக ஒரு கைத்தொழிலாளருக்கு 07 பேரச் படி வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்துக்காகத் தேவையான வழிகாட்டல் மற்றும் வசதிகளை ஏற்படுத்தியுள்ளன.

இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்காக இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் காணி 129.88 ஹெக்டேயர், எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியால் காணி 49.72 ஹெக்டேயர் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் மூலம் காணி 138.72 ஹெக்டேயர் ஒதுக்கப்பட்டுள்ளன.

